**கவனிக்க.-** *2015.09.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியில் பகுதி VI இல் குருநாகல் மற்றும் குளியாப்பிட்டி நீதாசன வலயங்களுக்குரிய யூரிமார் பெயர்ப்பட்டியல் ஒன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகிறது.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1932 - 2015 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2015.09.11

*1932 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1414 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1416 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2015, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## உணவு ஆணையாளர் திணைக்களம்

அலுவலக அடிப்படையிலான/கள அடிப்படையிலான
அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு
(தரம் II தரக் கட்டுப்பாட்டாளர்)

உணவு ஆணையாளர் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள அலுவலக அடிப்படையிலான/கள அடிப்படையிலான பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்பு முறை.**- இந்த அறிவித்தலில் விதந்துரைக்கப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகளில், உணவு ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளினைப் பெறுகின்ற பரீட்சார்த்தி, இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்படுவார். கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையானது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட புள்ளியிடல் திட்டத்திற்கமைவாக நடாத்தப்படும். (இலக்கம் 6 இல் குறிப்பிடப் பட்டவாறு).

2. **தேவையான தகைமைகள் :**

(i) **கல்விசார் தகைமைகள்.**- பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றிலிருந்து உணவுத் தொழில்நுட்பத்தில் பட்ட மொன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(ii) **தொழில்சார் தகைமைகள்.**- மூன்றாம் நிலை அல்லது வாழ்க்கைத் தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவகமொன்றிலிருந்து 300 மணித்தியா லங்களுக்கு குறையாமல் கணினிப் பாடநெறியினைப் பின்பற்றியமைக்கான சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iii) **அனுபவம்.**- தரக் கட்டுப்பாடு தொடர்பான அனுபவத்தினைக் கொண்டிருத்தல் மேலதிக தகைமையாகக் கருதப்படும் ;

(iv) **உடல் ரீதியான தேவைப்பாடுகள்.**- ஒவ்வொரு விண்ணப்ப தாரியும் நாட்டின் எப்பகுதியிலேனும் கடமையாற்றுவதற்கான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தினையும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானதாகவும் இருத்தல் வேண்டும் ;

(v) **ஏனைய தகைமைகள்.**- விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியின்போது-

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;
* நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;
* ஆட்சேர்ப்புக்கான தகைமைகளை நிறைவு செய்தவ ராக இருத்தல் வேண்டும்.

3. **தொழில் மற்றும் சேவை நிபந்தனைகள் :**

(i) இது நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமானதான பதவியாகும் என்பதுடன் விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) இந்த நியமனமானது 3 வருட தகுதிகாண் காலத்தினைக் கொண்டிருக்கும். நியமனம் பெறுபவர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் விதித்துரைக்கப்பட்டவாறான தரக் கட்டுப்பாட்டாளர் தரம் II இற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 3 வருட காலப்பகுதியினுள் தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும் ;

(iii) பொது நிருவாக சுற்றறிக்கை இல. 07/2007 இன் நியதிகளின்படியும் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகளுக்கமைவானதாகவும், பரீட்சார்த்தி அவர் அரச சேவைக்கு இணைந்த மொழியல்லாத மற்றைய அரச கரும மொழியில் இப்பதவியில் இணைந்த திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதியினுள் உரிய தகைமையினைப் பெறுதல் வேண்டும் ;

(iv) இந்த நியமனமானது, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகள் என்பவற்றிற்குட்பட்டதாகும்.

4. **வயதெல்லை.**- விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியின்போது 21 வயதிற்கு குறையாதவர்களாகவும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம்.**- இணைக்கப்பட்ட பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 16,720 - 10 x 320 - 11 x 365 - 15 x 450 - ரூபா 30,685 ஆகும். (2007.08.24 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இல. 6/2006 (iv) மற்றும் MN 05-2006 சம்பளத் தொகுதி).

6. கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையானது பின்வரும் புள்ளியிடலின் அடிப்படையில் நடாத்தப்படும் :-

| | விடயம் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|---|
| (i) | மேலதிக கல்விசார் தகைமைகள் | 20 |
| (ii) | தொழில்சார் தகைமைகள் | 20 |
| (iii) | அனுபவம் | 25 |
| (iv) | கணினி அறிவு | 15 |
| (v) | ஆங்கில மொழியில் ஆற்றல் | 15 |
| (vi) | நேர்முகப் பரீட்சையின்போது காட்டிய திறன்கள் | 05 |
| | மொத்தம் | 100 |

7. **பரீட்சார்த்திகளை அடையாளங்காணுதல்.**- ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படும். நேர்முகப் பரீட்சைக்கு அனைத்துச் சான்றிதழ்களினதும் மூலப்பிரதிகள் மற்றும் நிழற்படப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்கு நேர்முகப் பரீட்சையில் பின்வரும் ஆள் அடையாளத்தினை உறுதிப் படுத்தும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

8. **விண்ணப்பிக்கும் முறை** :

(அ) முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2015, ஒற்றோபர் 7 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக கீழ்வரும் முகவரியினைச் சென்றடையும் வகையில் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உணவு ஆணையாளர்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

(ஆ) சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் மாதிரியில் தரப்பட்டவாறு விடயம் 1 இலிருந்து 5 வரையிலும் முதல் பக்கத்திலும் விடய இலக்கம் 6 இல் இருந்து 12 வரையில் இரண்டாவது பக்கத்திலும் அமையும் வகையில் ஏ4 அளவுத்தாளில் விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்து அவற்றினைத் தமது சொந்தக் கையெழுத்தினால் நிரப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "அலுவலக அடிப்படையிலான/ கள அடிப்படையிலான (தரம் II தரக் கட்டுப்பாட்டாளர்) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாகக் குறிப்பிடப் படுதல் வேண்டும்.

(ஈ) பரீட்சார்த்தியின் கையொப்பமானது, அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பிரசித்த நொத்தாரிசு அல்லது முப்படைகளின் கட்டளையிடும் அதிகாரி அல்லது மாதாந்தம் 22,935 ரூபா திரட்டிய சம்பளத்தினைப் பெறும் நிரந்தரப் பதவியினை வகிக்கும் அரச உத்தியோகத்தரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(உ) ஏற்கனவே அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ள பரீட்சார்த்தியெனில், அவர்கள் தமது விண்ணப்பங்களை தாம் தற்போது சேவையாற்றும் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

(ஊ) தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தாமதம் அல்லது தபாலில் தொலைந்துபோதல் தொடர்பிலான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. **பொய்யான தகவல்களை வழங்குதல்**.- தங்களினால் வழங்கப்பட்டுள்ள ஏதேனும் விபரங்கள் பொய்யானது அல்லது தவறானதென ஆட்சேர்ப்பின் முன்னதாக கண்டுபிடிக்கப்படுமிடத்து, தங்களின் தகைமையானது இரத்துச் செய்யப்படும். அத்தகைய பொய்யான தகவல் அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்பின் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து, சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. உணவு ஆணையாளர் இந்தப் பதவியிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குமான அல்லது நிரப்பாமல் விடுவதற்குமான அனைத்து அதிகாரங்களையும் கொண்டுள்ளார்.

சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழியிலான இந்த வர்த்தமானி அறிவித்தலில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படுமிடத்து சிங்கள மொழி மூலமான அறிவித்தலே மேலோங்கி நிற்கும்.

நிமல்கா டயஸ்,
உணவு ஆணையாளர்.

உணவு ஆணையாளர் திணைக்களம்,
இல. 330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
2015, ஓகத்து 25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**உணவு ஆணையாளர் திணைக்களம்**

**அலுவலக அடிப்படையிலான/கள அடிப்படையிலான (தரம் II தரக் கட்டுப்பாட்டாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2015**

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக் களில்) :----.
(உதாரணம் : Gunawardhana, H. M. S. K.)
1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.3 தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2.4 அலுவலக முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

3. 3.1 ஆண்/பெண் :
ஆண்-0
பெண்-1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

4. பிறந்த திகதி :

ஆண்டு [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]

விண்ணப்ப முடிவுத் திகதியில் வயது :

வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]

5. கல்வித் தகைமைகள் :

5.1 உணவுத் தொழில்நுட்பம் தொடர்பான பட்டம் பெற்ற வருடம் : ----.

5.2 பல்கலைக்கழகம் :----.

5.3 பெறுபேறு :----.

6. தொழில் தகைமைகள் :----

7. சேவை அனுபவம் :----.

8. நீங்கள் எப்போதேனும் ஏதேனும் ஒரு குற்றச்சாட்டு தொடர்பில் நீதிமன்றமொன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா ? :----.

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக)

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

9. நீங்கள் இதற்கு முன்னர் அரச சேவையிலிருந்து அதனை முடிவுறுத்தியுள்ளீர்களா ? :----.

10. **விண்ணப்பதாரரின் உறுதியுரை**.- என்னால் இந்த விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதுமென சான்றுப்படுத்துகின்றேன். இதில் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவையென்றோ அல்லது தவறானவையென்றோ நியமனத்திற்கு முன் கண்டுபிடிக்கப்படின் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவன் என்றும் நியமனத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்படின் எவ்வித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேன் என்றும் நானறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினைச் சான்றுப்படுத்தல் :** (வர்த்தமானி அறிவித்தலின் 8 (இ) பந்தியில் தரப்பட்டுள்ள அறிவித்தலுக்கிணங்க)

இந்த விண்ணப்பப்படிவத்தினைச் சமர்ப்பிக்கும் ................ (முழுப்பெயர்) எனும் பெயருடையவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கறிவேன் என்றும், அவர் தனது கையொப்பத்தினை .................................. ஆந் திகதி என் முன்னிலையில் இட்டுள்ளார் என்றும் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடுதல் வேண்டும்.)

12. **விண்ணப்பதாரி அரச உத்தியோகத்தரெனில், திணைக்கள/ நிறுவகத் தலைவரின் உறுதிப்படுத்துகை :**

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................................ இந்த அமைச்சு/திணைக்களம்/ மாகாண சபை/நிறுவனத்தில், நிரந்தர/அமைய/தற்காலிக அடிப்படையிலான ஊழியர் எனவும், மேற்படி பதவிக்கு இவர் தெரிவுசெய்யப்பட்டால் இவரை இப்பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவர் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின்
கையொப்பமும் உத்தியோகபூர்வ முத்திரையும்.

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையினை இடுதல் வேண்டும்.)

9-227

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா, அல்குர்ஆன் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சை - 2014

(பௌத்த தஹம் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சைக்குச் சமாந்தரமானது)

1. **ஒழுங்கு விதிகளும் பிரமாணங்களும்**.- மேற்படி பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில் நடாத்தப்படும். பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டங்களும் இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளன.

2. **பரீட்சை நிலையங்கள்**.- இணைப்பு 2 இல் கூறப்பட்டுள்ள நகரங்களில் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் :

ஆயினும் ஏதாவதொரு நகர பரீட்சை நிலையத்திற்குப் போதிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்காதபோது குறித்த பரீட்சை நிலையம் இரத்துச் செய்யப்பட்டு அந்த நிலையத்திற்குரிய விண்ணப்பதாரிகள்

அண்மையிலுள்ள வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றச் செய்யப்படுவர். பரீட்சை நிலையங்கள் நிறுவப்படும் மாவட்டங்களும் நகரங்களும் உள்ளடக்கிய பட்டியல் இணைப்பு 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **ஊடக மொழி**.- இப்பரீட்சை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். எனினும் ஒரு பரீட்சார்த்தி, தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் இவற்றுள் யாதேனும் ஒரு மொழி மூலம் மட்டுமே தோற்ற முடியும்.

4. **தகைமைகள்**.- இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளில் ஏதேனுமொன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.1 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில், பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலையொன்றில் 10 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவர்களாயிருத்தல் ;

அல்லது

4.2 முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால், அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட தர அல்குர்ஆன் மத்ரஸா பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்த மாணவராயிருத்தல் ;

அல்லது

4.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இஸ்லாம், அரபு ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களாயிருத்தல்.

**குறிப்பு**.- (1) இப்பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு விண்ணப்ப தாரியும், மேலே 4 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளாரென அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(2) பரீட்சார்த்தி ஒருவர் இப்பரீட்சைக்குப் பதிவு செய்யப்பட்ட அஹதிய்யாப் பாடசாலை அல்லது சிரேஷ்ட அல்குர்ஆன் மத்ரஸா அல்லது பாடசாலை அதிபர் மூலமே விண்ணப்பிக்க முடியும்.

5. பதிவு செய்யப்பட்ட சகல அஹதிய்யாப் பாடசாலைகள், சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாக்கள், மத்ரஸா பாடசாலைகள் என்பவற்றிற்கு விண்ணப்பப் பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் தபால் மூலம் அனுப்பி வைக்கப் படும். விண்ணப்பப்பத்திரங்களும், அறிவுறுத்தல்களும் கிடைக்கப் பெறாத நிறுவனங்கள், "பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு 2015, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதிக்கு முன் விண்ணப்பப படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.-

5.1 விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவ தோடு, மற்றைய பிரதியினைக் குறிப்பிட்ட நிறுவனத்தில் கோவைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

5.2 விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2015, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி ஆகும்.

5.3 விண்ணப்பப்படிவங்கள் தெளிவாகவும், பிழைகளின்றியும் பூரணப்படுத்தப்படல் வேண்டும். அவ்வாறு பூர்த்தி செய்யப் படாத விண்ணப்பப்படிவங்களும், இறுதித் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப் படிவங்களும் நிராகரிக்கப்படும்.

5.4 பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்:-

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

5.5 விண்ணப்பங்கள் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

5.6 விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இஸ்லாமிய சன்மார்க்க அஹதிய்யா இறுதிச் சான்றிதழ் பரீட்சை 2014" எனவும், பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் நகரமும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

5.7 விண்ணப்பங்களோடு எவ்வித சான்றிதழையும் இணைத்து அனுப்பக்கூடாது. அஹதிய்யாப் பாடசாலையின் அல்லது சிரேஷ்ட குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் அல்லது பாடசாலை அதிபர் விண்ணப்பதாரி குறித்த தகைமையைப் பெற்றுள்ளார் என்பதை உறுதிப்படுத்தி இருத்தல் வேண்டும்.

6. **பரீட்சைக் கட்டணம் செலுத்தும் முறை** :

6.1 இப்பரீட்சைக்கு முதற்தடவையாகத் தோற்றும் பரீட்சார்த்தி களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதன் பின்னர் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு கட்டணம் 150 ரூபா ஆகும். நூன சித்தியை பூரணப்படுத்துவதற்கான பாடத்திற்கு பரீட்சைக் கட்டணமாக 50 ரூபா செலுத்துதல் வேண்டும்.

6.2 பரீட்சைக் கட்டணம் செலுத்தவேண்டிய பரீட்சார்த்தி களுக்கான முழுத்தொகையையும் இலங்கையின் எந்தவொரு அஞ்சலகத்திலாவது செலுத்திப் பெறப்படும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பயனுடையது.)

7. **அனுமதி அட்டைகள்**.- பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் உரிய அஹதிய்யா பாடசாலை அதிபர், அல்லது மத்ரஸா அதிபர் அல்லது பாடசாலை அதிபருக்கு வழங்கப் படும். அதிபரினால் அவ்வனுமதி அட்டைகள் உரிய பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்பட வேண்டும்.

7.1 ஏதாவதொரு பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றும் ஆரம்ப தினத்திலேயே பரீட்சை அனுமதி அட்டையை பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கத் தவறும்பட்சத்தில் அல்லது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் குறித் தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலல்லாது வேறொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற எத்தனிக்கும் பட்சத்தில் உரிய பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தகைமை இரத்துச் செய்யப்படும்.

7.2 அனுமதி அட்டையிலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அஹதிய்யாப் பாடசாலை அதிபர், குர்ஆன் மத்ரஸா அதிபர், பாடசாலை அதிபர், அரபுக் கல்லூரி அதிபர், வருடமொன்றிற்கு 2,40,360 ரூபாவிற்கு மேல் திரட்டிய வருடாந்த சம்பளத்தைப் பெறும் நிரந்தர அரச சேவை உத்தியோகத்தர், மஸ்ஜிதுக்குப் பொறுப்பான இமாம் ஆகியோரில் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

7.3 பரீட்சை நடைபெறுவதற்கு ஏழு (7) தினங்களுக்கு முன்னர் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத சந்தர்ப்பத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த, அஹதிய்யாப் பாடசாலை, குர்ஆன் மத்ரஸா, பாடசாலை என்பவற்றின் அதிபர்கள் இது தொடர்பாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் கீழ்வரும் விடயங்கள் தெரிவிக்கப்படுதல் வேண்டும் :-

(அ) பரீட்சையின் பெயர் :-----.
(ஆ) அஹதிய்யாப் பாடசாலை/ குர்ஆன் மத்ரஸா/ அரசாங்கப் பாடசாலையின் பெயரும் கணினி இலக்கமும் :-----.
(இ) பரீட்சார்த்தியின் முழுப் பெயரும் விலாசமும் :-----.
(ஈ) பரீட்சைக்கு விண்ணப்பித்த நகரம் :-----.
(உ) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த தபால் நிலையம் :-----.
(ஊ) பதிவு செய்த இலக்கமும் திகதியும் :-----.

8. **ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல்**.- சகல பரீட்சார்த்திகளும் தாம் பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென கீழ்க்குறிப்பிடப்பட்ட அடையாள அட்டைகளில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

8.1 ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 அஞ்சல் அடையாள அட்டை.

9. **பரீட்சை முடிவுகளை வெளியிடலும், சித்திபெற்றமையைத் தீர்மானித்தலும்** :

9.1 இப்பரீட்சைக்குரிய பாடங்கள் நான்கு ஆகும். குறித்த நான்கு பாடங்களிலும் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர்.

9.2 ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்று ஒரு பாடத்தில் மட்டும் சித்தி பெறத்தவறுவோர் நூன சித்தி பெற்றவராகக் கருதப்படுவார். அவர்கள் அடுத்து வரும் இரண்டு பரீட்சைத் தவணைகளுக்குள் நூன சித்திப் பாடத்திற்கு மாத்திரம் தோற்றி சித்தி பெற்றால், பரீட்சையில் சித்தி பெற்றவராகக் கணிக்கப்படுவர். (இது 2011 ஆம் ஆண்டுக்குரிய பரீட்சை முதல் நடைமுறைப் படுத்தப்படும்.)

9.3 ஒவ்வொரு பாடத்திற்கும் 100 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். ஒவ்வொரு பாடத்திற்கும் பெறப்படும் புள்ளிகள் கீழ்க்குறிப்பிட்டவாறு தரப்படுத்தப்படும் :-

| புள்ளி மட்டம் | தரம் | குறியீடு |
|---|---|---|
| 0 - 34 | சித்தியின்மை | F |
| 35 - 54 | சாதாரண சித்தி | S |
| 55 - 69 | திறமைச் சித்தி | C |
| 70 - 100 | விசேட சித்தி | D |

9.4 **பரீட்சை முடிவுகளை வெளியிடல்**.- பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்கள் உரிய நிறுவனங்களது அதிபர்களுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

10. **சான்றிதழ்**.- பரீட்சையில் சித்திபெறும் ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

11. **விடைத்தாள் மீள்பரிசீலனை**.- பரீட்சை முடிவுகள் வெளியாகி 30 நாட்களுக்குள் இத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்படும் படிவங்கள் மூலம் குறிப்பிட்ட நிறுவனத்தின் அதிபர் விண்ணப்பம் செய்தால் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான வாய்ப்பு வழங்கப்படும். எனினும், இதற்கு உரிய கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். பரீட்சை முடிவுகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே கட்டணம் மீளளிக்கப்படும். எக்காரணம் கொண்டும் விண்ணப்ப தாரிக்கோ அல்லது அவரது பிரதிநிதிக்கோ விடைப்பத்திரங்களைப் பார்வையிடுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. இங்கு குறிப்பிடப்படும் நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கமைய நடந்து கொள்வதற்கு எல்லா விண்ணப்பதாரிகளும் கட்டுப்பட்டுள்ளதோடு, இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்களிருப்பின் அவை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிவுக்கேற்பத் தீர்மானிக்கப்படும்.

டபிள்யூ. எம். என். ஜே. புஷ்பகுமார,
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

ஒழுங்கமைப்பு, வெளிநாட்டு பரீட்சைகள் கிளை,
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை,
2015, ஓகத்து 24.

### இணைப்பு - 1

**பரீட்சைக்கான பாடங்களும், பாடத்திட்டமும்**:- இப்பரீட்சை ஒவ்வொரு வினாத்தாள்களும் மூன்று மணித்தியாலங்களைக் கொண்ட நான்கு வினாப்பத்திரங்களையுடையதாகும். வினாப்பத்திரங்களின் கட்டமைப்பும், வினாக்களுக்கான புள்ளி ஒதுக்கீடும் 2004.09.10 ஆந் திகதிய 1358 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கேற்றவாறு அமைந்திருக்கும்.

முதலாம் வினாப்பத்திரம்

1. **அகீதாவும், ஷரீஆவும் (இஸ்லாமிய கோட்பாடும் மூலாதாரங்களும்) அரபு மொழியும்**

1.1 அகீதா பொது விளக்கம் (அல் இலாஹிய்யாத், அந்நுபுவ்வத், அர்ரூஹானிய்யாத், அஸ்ஸம்இய்யாத்)

1.2 அகீதாவின் பிரிவுகள்
* அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஅத்தின் அகீதா
* ஏனைய அகீதாப் பிரிவுகளிற் சில ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜியா முஃதஜிலா, ஷீஆ

1.3 தௌஹீதும், ஷிர்க்கும்
* ஈமானும், குப்றும்
* ரித்தத், நிபாக்
* அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாறு

* சட்ட மூலாதாரம் என்ற வகையில் அல்குர்ஆனின் பயன்பாடு
* ஸுன்னாவின் தோற்றமும் தொகுக்கப்பட்ட வரலாறும்
* சட்ட மூலதாரம் என்ற வகையில் ஸுன்னாவின் பயன்பாடு
* ஹதீஸ் கலை வரலாறும் பிரதான முஹத்திஸ்களின் பங்களிப்புகளும்
* இஜ்திஹாத் பற்றிய விளக்கம்
* துணை மூலாதாரம் என்ற வகையில் இஜ்மா
* துணை மூலாதாரம் என்ற வகையில் கியாஸ்
* பிக்ஹுடைய வரலாறும் பிரதான இமாம்களும்

1.4 அறபு மொழி
* உறுப்பமைய எழுதுதல்
* சிறு வாக்கியங்களை எழுதுதல்
* இஸ்லாம் பாடத்துடன் தொடர்புடைய அறபுச் சொற்களை எழுதுதல்
* முக்கியமான ஸூறாக்களையும், ஆயத்துக்களையும், ஹதீஸ்களையும் பிழையின்றி எழுதுதல்.

## *இரண்டாம் வினாப்பத்திரம்*

### 2. அல் பிக்ஹுல் இஸ்லாமி (இஸ்லாமிய சட்டநெறி)

2.1 இபாதத் பற்றிய விளக்கம்
* இபாதத்தின் பிரிவுகள்
* தஹாரத்

2.2 நஜீஸும் அதன் வகைகளும்
* நஜீஸை சுத்தப்படுத்தும் முறை
* நீரும் அதன் வகைகளும்
* வுழு, தயம்மும், குளிப்பு பற்றிய நடைமுறை ஒழுங்குகள்

2.3 ஸகாத்
* முக்கியத்துவம்
* விதி முறைகள்
* திரட்டலும் விநியோகமும்
* ஸகாத் மூலம் வறுமைத்தணிப்பும் செல்வப்பங்கீடும்

2.4 நோன்பு
* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

2.5 ஹஜ்
* முக்கியத்துவம்
* விதிமுறைகளும் பயனும்

2.6 ஹஜ்: நிறைவேற்றும் முறை
* பர்ளுகள், வாஜிபுகள், சுன்னத்துகள்
* பர்ளான ஹஜ்ஜுக்கு மேலதிகமாக செய்யும் ஹஜ்கள்

2.7 இஸ்லாத்தில் உணவு, உடை, உறையுள் பற்றிய கண்ணோட்டமும் நடைமுறைகளும்

2.8 ஜிஹாத் பற்றிய விளக்கம்

2.9 குர்பானிகளும் அறுப்பு முறைகளும்

2.10 சத்தியம் செய்தலும் நேர்ச்சையும்

2.11 முஆமலாத் பற்றிய விளக்கம்
* உழைப்பின் முக்கியத்துவம்
* பிரதான கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) ஏனைய கொடுக்கல் வாங்கல் (உ+ம்: இரவல், வாடகை)
* வக்பு, வஸிய்யத், வராஸத் (பொதுச்சொத்து, உயில் சொத்து, வாரிசுச்சொத்து)

2.12 இஸ்லாத்தில் ஆண், பெண் நிலை
* நிகாஹின் விதிமுறைகளும் பயனும்
* குடும்ப வாழ்வு
* கணவன்-மனைவி
* பெற்றோர் - பிள்ளை உரிமைகளும் கடமைகளும் தலாக்கும் இத்தாவும்

2.13 ஜினாயத்
* ஹுதூத், கிஸாஸ், தஃஸீர்

## *மூன்றாம் வினாப்பத்திரம்*

### 3. ஸீறாவும் தாரீகும்

3.1 இஸ்லாத்துக்கு முந்திய அரபு நாட்டின் சமய சமூக நிலை

3.1.1 நபி (ஸல்) அவர்கள்

- நுபுவத்திற்கு முந்திய வாழ்க்கை
  * குடும்பம், பரம்பரை
  * இளமைப்பருவம்
  * நற்குணம்
  * திருமணம்
- நுபுவ்வத்துக்கும் ஹிஜ்ரத்திற்கும் இடையிலான வாழ்க்கை
  * நுபுவ்வத் கிடைத்தல்
  * இஸ்லாமிய பிரச்சாரங்களும் விளைவுகளும்
  * மிஃராஜ்
  * ஹிஜ்ரத்
- மதீனா வாழ்க்கை
  * சமூக அரசியல் செயற்பாடு
  * தற்காப்பு யுத்தங்களும், சமாதான உடன்படிக்கைகளும்
  * இஸ்லாம் பூரணத்துவம் பெறல்.
- ஸஹாபாக்களின் அந்தஸ்தும் இஸ்லாத்திற்கான அவர்களது பங்களிப்பும்
- குலபாஉர்ராஷிதீன்கள் வரலாறும், அரசியல் பங்களிப்பும்
- உமையா, அப்பாசிய ஆட்சிக்காலம்
- பைத்துல் முகத்தஸ் - வரலாறு
- இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் பங்களிப்பும்
- முஸ்லிம்களின் அறிவியல் பங்களிப்பு
- பின்வருவோர் பற்றிய வரலாறு
  * இமாம் புகாரி (ரஹ்)
  * இமாம் ஷாபிஈ (ரஹ்)
  * இமாம் கஸ்ஸாலி (ரஹ்)
  * இமாம் அப்துல் காதி ஜீலானி (ரஹ்)
  * இமாம் ஷாதுலி (ரஹ்)

**நான்காம் வினாப்பத்திரம்**

**4. அஃலாக் - (இஸ்லாமிய ஒழுக்கவியல்)**

4.1 அஃலாக் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்

* அஃலாக் பற்றிய விளக்கம்
* ஈமானுக்கும் அஃலாக்குக்கும் இடையிலான தொடர்பு
* அஃலாக்குக்கும் இபாதத்திற்கும் இடையிலான தொடர்பு
* உளத்தூய்மை (இஃலாஸ்)

4.2 தக்வா

* வரஉ, ஸுஹ்த்
* முராகபா, முஹாஸபா
* ஷவ்க் (இறையன்பு)

4.3 ஈகை

* தியாகம்
* நன்றியுணர்வு
* பொறுமை - சகிப்புத்தன்மை - விட்டுக் கொடுத்தல் - மன்னித்தல்
* பணிவு
* நேரம் பேணுதல்
* அவையவங்களைப் பேணுதல்-நாவு, கண், காது, பாலுறுப்பு
* பிறரை மதித்தல்
* நீதியும் நேர்மையும்
* இளைஞர், யுவதிகளிடம் காணப்பட வேண்டிய சிறப்பான ஒழுக்கப் பண்புகள்
* ஏனைய சமயத்தவர்களுடன் இணங்கி வாழ்தல்

4.4 இஸ்லாமிய நீதிமுறை

**இணைப்பு - 2**

**குறித்த மாவட்டங்களிலே பரீட்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ள நகரங்களும் அவற்றின் இலக்கங்களும்**

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|
| **கொழும்பு மாவட்டம்** | | 01 |
| கொழும்பு (மத்தி) | 01 | |
| பம்பலப்பிட்டி | 02 | |
| **களுத்துறை மாவட்டம்** | | 03 |
| பாணந்துறை | 08 | |
| களுத்துறை | 09 | |
| அழுத்கம | 10 | |
| **மாத்தறை மாவட்டம்** | | 05 |
| வெலிகமை | 12 | |
| மாத்தறை | 13 | |
| **கேகாலை மாவட்டம்** | | 07 |
| மாவனல்லை | 15 | |
| வரக்காபொலை | 16 | |
| கன்னத்தோட்டை | 17 | |
| **புத்தளம் மாவட்டம்** | | 09 |
| நுரைச்சோலை | 23 | |
| புத்தளம் | 24 | |
| சிலாபம் | 25 | |
| **பொலநறுவை மாவட்டம்** | | 11 |
| கதுறுவெல | 29 | |
| **கண்டி மாவட்டம்** | | 13 |
| கண்டி | 31 | |
| நாவலப்பிட்டி | 32 | |
| தெல்தொட்டை | 33 | |
| கெலி ஓயா | 34 | |
| **இரத்தினபுரி மாவட்டம்** | | 15 |
| எஹலியகொடை | 36 | |
| பலாங்கொடை | 37 | |
| **மொனராகலை மாவட்டம்** | | 17 |
| பிபிலை | 40 | |
| **மட்டக்களப்பு மாவட்டம்** | | 19 |
| காத்தான்குடி | 48 | |
| ஏறாவூர் | 49 | |
| வாழைச்சேனை | 50 | |
| **வவுனியா மாவட்டம்** | | 21 |
| வவுனியா | 54 | |
| **முல்லைத்தீவு மாவட்டம்** | | 23 |
| முல்லைத்தீவு | 56 | |
| **யாழ்ப்பாண மாவட்டம்** | | 25 |
| யாழ்ப்பாணம் | 58 | |
| **கம்பஹா மாவட்டம்** | | 02 |
| திஹாரிய | 03 | |
| மாபோலை | 04 | |
| மல்வானை | 05 | |
| நீர்கொழும்பு | 06 | |
| கல்எலிய | 07 | |
| **காலி மாவட்டம்** | | 04 |
| காலி | 11 | |
| **அம்பாந்தோட்டை மாவட்டம்** | | 06 |
| அம்பாந்தோட்டை | 14 | |
| **குருநாகல் மாவட்டம்** | | 08 |
| குளியாபிட்டி | 18 | |
| குருநாகல் | 19 | |
| மெல்சிறிபுர | 20 | |
| பொல்கஹவெல | 21 | |
| கெகுனாகொல்ல | 22 | |

| நகரம் | நகர இல. | மாவட்ட இல. |
|---|---|---|
| **அநுராதபுர மாவட்டம்** | | 10 |
| அநுராதபுரம் | 26 | |
| கெக்கிராவை | 27 | |
| கலென்பிந்துனுவெவ | 28 | |
| **மாத்தளை மாவட்டம்** | | 12 |
| மாத்தளை | 30 | |
| **நுவரெலியா மாவட்டம்** | | 14 |
| நுவரெலியா | 35 | |
| **பதுளை மாவட்டம்** | | 16 |
| பதுளை | 38 | |
| வெலிமடை | 39 | |
| **அம்பாறை மாவட்டம்** | | 18 |
| அக்கரைப்பற்று | 41 | |
| பொத்துவில் | 42 | |
| கல்முனை | 43 | |
| சம்மாந்துறை | 44 | |
| இறக்காமம் | 45 | |
| நிந்தவூர் | 46 | |
| ஒலுவில் | 47 | |
| **திருகோணமலை மாவட்டம்** | | 20 |
| மூதூர் | 51 | |
| கிண்ணியா | 52 | |
| திருகோணமலை | 53 | |
| **மன்னார் மாவட்டம்** | | 22 |
| மன்னார் | 55 | |
| **கிளிநொச்சி மாவட்டம்** | | 24 |
| கிளிநொச்சி | 57 | |

9-156

---

## இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

*இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அமெச்சூர் வானொலி இயக்குநர்களின் திறமைச் சான்றிதழ்களுக்கான பரீட்சை*

**திறமைச் சான்றிதழ்களுக்கான வகைகள்** :

(அ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் உயர்தர வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(ஆ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் பொது வகுப்பு திறமைகாண் சான்றிதழ் ;

(இ) அமெச்சூர் வானொலி இயக்குநரின் புதுப் பயிலுநர் திறமைகாண் சான்றிதழ் ;

2. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஆகக் குறைந்த தேவைப்பாடுகள்.**- இப்பரீட்சை எடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் பதினான்கு (14) வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

3. **பரீட்சைத் திட்டம்** :

(அ) **உயர்தர வகுப்பு**.- பரீட்சை இரு பகுதிகளைக் கொண்டுள்ளது:-

பகுதி 1 : இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - உயர் மின்னியல் தொழில்நுட்ப வானொலித் தொலைத்தொடர்புகள் (3 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அவதான நடவடிக்கை முறைகள் - (2 மணித்தியாலங்கள்)

பகுதி 2 : செயல் முறை மோர்ஸ் (Morse) கோட் பரீட்சை (ஒரு நிமிடத்தில் 05 சொற்கள்)

(ஆ) **பொது வகுப்பு**.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல் தொழில் நுட்ப வானொலித் தொலைத் தொடர்புகள் (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலங்கள்)

(இ) **புதுப் பயிலுநர்**.-

இரண்டு எழுத்துமூல வினாத்தாள்களுக்கு ஒரே அமர்வில் விடையளித்தல் வேண்டும்.

வினாத்தாள் I - அடிப்படை மின்னியல், வானொலி மற்றும் இலத்திரனியல் கோட்பாடுகள் - (2 மணித்தியாலங்கள்)

வினாத்தாள் II - உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள், இயக்கும் பயிற்சிகள், அத்துடன் நடவடிக்கை முறைகள் - (1 மணித்தியாலம்)

**4. பரீட்சைகளுக்கான நிபந்தனைகள்**.- எல்லாத் திறமைச் சான்றிதழ்களின் பகுதிகளுக்கும் பின்வரும் நிபந்தனைகள் ஏற்புடையன வாதல் வேண்டும் :-

(i) பரீட்சையில் சித்தியடைவதற்கு பரீட்சார்த்திகள் எல்லாப் பகுதிகளிலும் சித்தியடைதல் வேண்டும் ;
(ii) பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் பகுதி 1 இல் (இரண்டு எழுத்துமூல வினாத்தாள்கள்) ஒரே அமர்வில் சித்தியடைதல் வேண்டும் ;
(iii) இப்பரீட்சையின் பகுதி 1 இல் சித்தியடையும் பரீட்சார்த்திகள் மட்டுமே பகுதி 2 இற்கு தோற்றுவதற்கு அனுமதிக்கப் படுவார்கள்.

**5. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்**.- இப்பரீட்சை ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படும்.

**6. பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர்கள் தங்களின் பரீட்சைக் கட்டணங்களை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். மேலும் விபரங்கள் தேவைப் படின் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் அலுவல கத்துடன் எழுத்துமூலம் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பரீட்சைக் கட்டணமானது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பேரில் காசுக்கட்டளையாகவோ அல்லது எந்தவொரு வங்கியினதும் காசோலையாகவோ செலுத்தப்படலாம்.

விண்ணப்பப்படிவமானது, பதியப்பட்ட ஒப்படைப்பு மூலம் அல்லது பதிவு அஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது நேரடியாகக் கொண்டுவந்து கொடுக்கப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு வைத்திருக்கப்படுதல் வேண்டும் ஏனெனில் தபால் மூலம் அனுப்பப்பட்டதற்கான அல்லது நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்டதற்கான நிரூபணம் சமர்ப்பிக்கப்பட்டாலன்றி விண்ணப்பப்படிவம் ஒன்று கவனிக்கப்படவில்லை அல்லது தொலைந்து போயிற்று என்ற உரிமைக் கோரிக்கை எதனையும் இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்கு படுத்தும் ஆணைக்குழு கவனத்திற்கொள்ளாது. கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. அத்துடன் அவை ஒரு பரீட்சையிலிருந்து பிந்திய திகதியொன்றில் இன்னொரு பரீட்சைக்கும் மாற்றப்பட மாட்டாது. தமது விண்ணப்பத்தை மீளப்பெறுகின்ற அல்லது ஏதேனும் காரணத்துக்காக பரீட்சைக்குத் தோற்றமுடியாத பரீட்சார்த்தி எவரும் ஏதேனும் பிந்திய நுழைவுக்காக முழுப் பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

| பரீட்சையின் வகை | பகுதி 1 இற்கான கட்டணம் ரூபா | பகுதி 2 இற்கான கட்டணம் ரூபா |
|---|---|---|
| உயர்தர வகுப்பு | 276 | 138 |
| பொது வகுப்பு | 138 | - |
| புதுப்பயிலுநர் வகுப்பு | 138 | - |

குறிப்பு.- மேலே குறிப்பிட்ட கட்டணங்கள் எல்லா வரிகளும் உள்ளடங்கலாகும்.

**7. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி** .- பரீட்சை ஒரு வருடத்தில் மூன்று முறைகள் நடாத்தப்படும். பரீட்சைத் திகதி, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பின்னர் அறிவிக்கப்படும். விண்ணப் பங்கள் தோதான நுழைவுப் படிவத்தில் செய்யப்படல் வேண்டும். அப்படிவங்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டு அம்முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்பதாக அனுப்பப்படல் வேண்டும் :-

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08.

| சான்றிதழ்களின் வகை | இறுதி நுழைவுத் திகதி |
|---|---|
| உயர்தர வகுப்பு | 2015.09.30 |
| பொது வகுப்பு | |
| புதுப்பயிலுநர் வகுப்பு | |

**8. அத்தாட்சிப்படுத்தல்**.- பரீட்சார்த்தியின் கையொப்பம் பின்வரும் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும் :-

சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசுத் தரைப்படை, கடற்படை அல்லது வான்படை ஆகியவற்றின் ஆணையளிக்கப்பட்ட அலுவலர், வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் அலுவலர், அரசாங்க சேவையில் ஆண்டொன்றுக்கு 4,93,920 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய சம்பளம் பெறும் நிரந்தரப் பதவி வகிக்கும் அலுவலர்.

இவ்வாறு அமையாத மற்றைய விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக் கப்படும்.

**9. பரீட்சார்த்திகளை அடையாளம் காணல்**.- பரீட்சையில் பரீட்சார்த்தி ஒருவர் தமது ஆளடையாளத்தைக் காட்டுமாறு தேவைப் படுத்தப்படுவார். அதற்காக பின்வரும் ஆவணங்களில் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) அஞ்சல் மா அதிபதியால் வழங்கப்பட்ட செல்லுபடியான ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ;
(இ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை.

எல்லாப் பரீட்சார்த்திகளும், 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கப் பரீட்சைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயல்படுமாறு தேவைப்படுத்தப்படுவார்கள்.

இவ்விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் ஏற்பாடு செய்யப்படாத விடயம் எதுவும் தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் தீர்மானிக்கப்படும்.

தொலைத்தொடர்புகள் பணிப்பாளர் நாயகம்.

இலங்கைத் தொலைத்தொடர்புகள்
ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,
276, எல்விட்டிகல மாவத்தை,
மனிங் ரவுன்,
கொழும்பு 08,
2014.04.29.

9-222

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.